


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலும்னிய மழை

சேசு பெலிஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூலின் பெயர் : அலுமினிய மழை

நூலாசிரியர் : சேசு பெலிஸ்ரன்

நூலளவு : A5

பக்கங்கள் :

பிரதிகள் : 500


அச்சுப்பதிப்பு : ஸ்கை அச்சகம், மன்னார்

உரிமை : இயற்றியவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**அமரர்.**
**அருட்பணி. மேரி பஸ்ரியன்**
**அவர்களின் 35வது நினைவுதினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அமரர்.

அருட்பணி. பேரி மக்ரியஸ்

அவர்களின் 25வது நினைவுதினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமக்காய் தொலைந்து போன ஏந்தல் பஸ்ரியனுக்காய் வலிகள் தாங்கிய சில வரிகள்

தைத்திங்கள் ஆறிலெம் தரணியே தத்தளிக்க!
பைத்தியங்களானோம் எம் பங்கில் அனைவரும்!
மையிருட்டில் படை கொண்டு மாற்றான் பொறி செய்து
வைத்தார்கள் பொல்லாங்கு வண. பஸ்ரி அடிகளார்க்கு!
செய்வினை போல் பகை முடித்தார் அன்னலே எம்
வெய்யோனே!
கையறுந்து போனதாய் யாம் கதறும் குரல் கேளாயோ?

அஞ்சுவதற்கு அஞ்சுபவன் அறந்திண்டோள் வலியன்!
எஞ்சுவதற் கென்ன துயிர் துச்சமென்றெண்ணி
வஞ்சகர்கள் வலை விரிக்க வாரியணைத்துக்கொண்டவன்
தஞ்சமென்றெண்ணாது விஞ்சியதில் வேல் வார்த்தை
நஞ்சுப்பாதகர் வெஞ்சினத்தோர் உமைத் தீண்ட
நெஞ்சில் குண்டேந்தி எம் நினைவெல்லாம் நீயானாய்!

தங்கத் திருமகனாய் தரணியே உமைப் போற்ற
வங்கமே ஒருகணம் வலுவிழந்து போனதே
அங்கமே நோகா உனையீன்ற தாய் காக்க
பங்கமே தீண்டாது உன் பங்கைக் காத்தவனே
மங்காப் புகழ் செறி மறத்தமிழ் வீரமே! பெருங்காட்டுச்
சிங்கமே நீ சின்னப் பூனைகளின் உணவாகிப் போனாயோ?

சித்திரை மாதத் திரை வெண்நிலவே! எங்கள்
பத்தரை மாற்றுத் தங்கமே – அன்று
பத்தரை மணிக்கெல்லாம் பாதகர் உமைசூழ்ந்து
இத்தரை முழுவதும் இரத்தத்திரை படிய
நித்திரை கொண்டோரை நித்திரையில் சுட்டு
முத்திரை பதித்து முப்பதாண்டாயிற்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாழைக் குலையன்றோ நீர் எங்கள்
இளவாலை நகர் தந்த ஏந்தலே பஸ்ரியானே!
கலைவளர்க்க நீர் அரும் பணி செய்வளர்த்தீர்
விலையென்ன கொடுப்போம் எம் வீரத்திருமகனே!
புலையர்கள் பலர் சேர்த்து புல் நசுக்கிப் போனதாய்
உலை வைத்து போனாரே உம் நிலையான அன்புக்கு!

மாற்றான் கட்டளையை மனதிலே கொண்டேந்தி — சில
கூற்றுவர் வந்தார் கையிலே குண்டேந்தி!
ஆற்றலால் அறுந்தீ சொற்களால் அசையாத திருமகனை
சீற்றமுடன் துளைகுண்டு சின்னாபின்ன மாக்கியதே!
முற்றமெலாம் குருதி மழை முழங்கால் வரை தேங்கி
காற்றாய் கடலாய் காணாமற் போனீரே!

பஞ்சமில்லா உம் பண்பான வார்த்தைகள்
சஞ்சலங்கள் தீர்க்குமே எம் சரித்திர புத்திரனே!
வெஞ்சினம் கொள்ளாது எம்மவர் நெஞ்சானாய்
மிஞ்சவும் காணலியே உம் தேகம் நாம் காண
செஞ்சோற்று கடன்தீர்க்க செய்வதன்றி நிற்கின்றோம் - எம்
நெஞ்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும் அப்பனே

வலி தந்து போனீர்கள் ஐயா எம் பஸ்ரியானே!
பழி தீர்க்கும் பகைக்கயவர் கயிறிட்டு உமையிழுக்க
கரியாகிப் போனதாய் கதை கேட்டோம் தோழனே!
சுழியாலே சிக்குண்டு நீர் சுண்ணமாய்ப் போகையில்-உமை
மீட்க
வழியின்றிப் போனதே யாம் பாவிகளானோமே!
விழி நரம்புத் துளைகளால் விடும் கண்ணீர்த் திரளாலே
விடையொன்று தருவீரே விண்ணிலே அரசாள்வீர்!

சேசு. பெலிஸ்ரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள்"(மத்.5:14)



திரு.பெலிஸ்ரன் அவர்களின் "அலுமினிய மழை" எனும் நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். வங்காலையில் 1985ம் ஆண்டு ஆயுததாரிகளின் துப்பாக்கிக்கு இரையாகிப் போன அருட்பணி. மேரி பஸ்ரியன் அவர்களின் நினைவுதினத்தில் இவ்வாறான முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

வளர்ந்து வரும் நாகரீக காலத்தில் காலத்திற்கு காலம் நாம் மாறுபட்டாலும் எமது எண்ணங்களும் சிந்தனைகளும் ஏதோ வகையில் நவீனத்துவத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது நம் கலாச்சார சீரழிவுக்கு ஒரு காரணம். அதன் அடிப்படையில் நுகரப்படுகின்ற நாகரீக தன்மை நம்முடைய தொன்மையான வரலாறுகளை நம் பாரம்பரியங்களை மறக்கடிக்க செய்வதும் இதன் பிரதிகூலமே! நாட்கள் நகர்ந்து கொண்டே போனாலும் நாம் பட்ட வாழ்வியல் துன்பங்கள் நமக்குப்பின் வருகின்ற சமுதாயத்திற்கு நூல் படிமங்களாக உருக்கொடுக்க வேண்டியது நம் முக்கிய தேவையாகும். அந்த வகையில் இந்நூல் போரில் எதிர் கொண்ட துன்பியல் நிகழ்வுகளை பெரும்பாலான கவிதைகளில் எடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

போரின் வடுக்களை மட்டுமல்லாது நம் யதார்த்த வாழ்க்கையில் எதிர் கொள்ளக்கூடிய பல விடயங்களை சுட்டிக் காட்டியிருக்கின்றது "அலுமினிய மழை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோவில்களின் கோபுரங்கள் மட்டும்
எங்கள் கூக்குரல் எதிரொலிக்க
கண்கள் காட்டுகிற பலர் பிரம்மைகளில்
கடவுளை கண்டதாய்
வீடு வந்து சேர்கிறோம்
வெறுமையாய்!"

எனும் ஆன்மீகத் தேடல் பற்றிய கவிதை நம் அனைவரையும் ஆன்மீகத் தேடலில் எவ்வகையான நிலைப்பாடுகளை கொண்டுள்ளோம் என்பதை எடுத்தியம்பியிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனவே அருட்பணி. மேரி பஸ்ரியனின் சமர்ப்பண நூலாக வெளியாகும்! இந்நூல் அனைவர் மனங்களையும் கவர்ந்து இனிவரும் காலங்களிலும் இவர் தொடர்ச்சியாக பல நூல்களை சொந்தமாக்கிக் கொள்ள அன்னை ஆனாளின் வழியாக ஆசித்து நிற்கின்றேன்.

அருட்பணி. சந்தியோகு மார்க்கஸ்,
பங்குத்தந்தை,
புனித ஆனாள் ஆலயம், வங்காலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவரும்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வருமாகிய

செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் அவர்கள் வழங்கிய

## அணிந்துரை



உலகோரை ஆட்கொள்ளும் தமிழ்க்கவிதைக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. சங்ககாலத்திற்கு முன்பே கவிதையின் வகைப்பாடுகளுள் ஒன்றாகக் கொள்ளத்தக்க பாட்டு வடிவம் தமிழில் இருந்திருக்கின்றது. சங்கப் பாடல்கள் சொற்சித்திரங்களாகத் தம்மை அடையாளப்படுத்தின. இன்றைய கவிஞர்களே வியக்கின்ற அளவிற்குச் சில பாடல்களில் கவிதை மொழி கையாளப்பட்டிருக்கின்றது.

கவிதை குறித்துக் காலத்திற்குக் காலம் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. "கவிதையைத் தர்க்கத்தால் மதிப்பிட்டுவிட முடியாது. கவிதைக்குப் புறவய வாசிப்பே இல்லை. கவிதை மீதான வாசிப்பும் அருவமான தளத்திலேயே நிகழ்கின்றது. நல்ல கவிதை விமர்சனம் என்பது அருவமான தளத்தில் வாசித்து மதிப்பிட்டதைத் தர்க்க பூர்வமாக பகிர்ந்து கொள்ள முனைவது மட்டுமே" என்பார் எழுத்தாளர் ஜெயமோகன்.

இவ்வாறான கருத்தை எனக்குக் கவிதை பற்றிக் கற்றுத்தந்த கவிஞர் இ.முருகையன் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்போந்த ஜெயமோகனின் கூற்றிற்கு ஒப்பான கூற்றை முன்வைத்த போது கவிதையை இரசிக்கின்றவர்கள் காதைக் கழட்டி வைத்துவிட்டா கவிதையை அனுபவிக்கின்றனர் என முருகையன் வாதித்தமை எனது ஞாபகத்தில் இழையோடுகின்றது.

கவிதைக்கு ஓசை அவசியமில்லை என்று பெரும்பாலான கவிஞர்களும் விமர்சகர்களும் நம்புகின்ற இந்தக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓசைதரும் இன்பம் உவமையில்லா இன்பமன்றோ" என்பது பாரதியாரது கூற்று.

கவிதை பற்றிக் கூறுவோர் பாரதியாரை முன்னிறுத்துவது வழமையாகும். "சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது சொற்புதிது சோதிமிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகாகவிதை" என்பது பாரதியின் வாக்கு. அத்தகைய நவகவிதையையும் தாண்டி புதுக்கவிதையை அடையாளப்படுத்துகின்றவர்கள் இருக்கின்றனர்.

புதுக்கவிதையில் சொற்சிக்கனமும் பொருட்தெளிவுமே முதன்மை பெறுகின்றன. தான் எடுத்துக்கொண்ட பொருளை குறியீடுகளூடாகவும் படிமங்கள் ஊடாகவும் நகர்த்திச் செல்கின்ற பணியை புதுக்கவிதைகள் மேற்கொள்கின்றன.

சேகு பெலிஸ்ரனின் அலுமினிய மழை கவிதைத் தொகுதியைப் படிக்கின்ற போது புதுக்கவிதைகளைப் படிக்கின்ற அனுபவமே என்னுள் விளைகின்றது.

போர் சப்பித்துப்பிய மண்ணில் போரின் வக்கிரங்களைக் குறிப்பதாகவே அலுமினிய மழை என்ற குறியீட்டை நான் பார்க்கின்றேன். போர் வக்கிரங்களால் ஆதாயமடைந்தோர் அரசியலாளர்கள். மழையை வைத்துக் குடை விற்பனையாளர் ஆதாயமடைவதற்கு இது ஒப்பானது.

*"வான்வெடித்துச் சிதறிய*
*கந்தக மழையின்*
*அக்கினிக் குளிரில்*
*குடையோடு நின்றவர்கள்*
*எம்குலத் தலைவர்கள்*

என அரசியலாளர்களை கவிஞர் சாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று குஞ்சுகளைத் தொலைத்துவிட்டுக் கூவிக் கொண்டிருக்கும் குயில்கள் எங்கள் மண்ணில் எழுப்பும் ஓசையை இன்னும் நாம் உணர்ந்துவிடவில்லையே என்ற ஆதங்கத்தையும் கவிஞர் வெளிப்படுத்துகின்றார். புரியாத இசை என அதற்குத் தலைப்பிட்டிருக்கின்றார்.

சமூக வாழ்வியலில் பல மாற்றங்கள் ஊடறுத்து வந்தவண்ணம் உள்ளன. முதியோர் இல்லப் பெருக்கம் அவற்றுள் ஒன்றாகும். இதனை

முதியோர் இல்லத்தில்

*முதற்படியில் இடறும் போது*

*தவமிருந்து*

*பெற்ற வரங்களும்*

*'சாபமாகும்' என்பதை*

*நிரூபித்தன பிள்ளைகள்* என்கிறார்.

தாய்மை உணர்வைப் பெற்றிட பிள்ளையைப் பெற வேண்டுமென்றில்லை.

*பச்சிளம் குழந்தை*

*படிதாண்டி இடறி*

*மண்ணை முத்தமிட*

*மலடியும் பெற்றாள்*

*பிரசவ வலிகளை*

என ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார் கவிஞர்.

'போலிகள்' சமூகத்தில் தமது செல்வாக்கைக் காட்டுவதைச் சாடுகின்றார் கவிஞர். மாயை என்ற கவிதையில் இந்தச் சாடல் வெளிப்படுகின்றது.

*கடைகளில் மட்டுமல்லக் கலப்படங்கள்*

*எங்கள் காணிக்கைகளிலும் தான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதனால் கடவுள்களிலும் தான் !*
என்கிறார்.

வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்
என்றான் பாரதி
இங்கு கவிஞர்
*வயிறு காய்ந்தவன்*
*எங்கோ ஒரு மூலையில் வாடிக்கிடக்கின்றான்*
*சில்லறைகள் மட்டும்*
*சந்நிதானத்தில் என்ன வரம் கேட்கின்றதோ?*
எனச் சாடுகின்றமையைக் காண்கின்றோம்.

சமூக அவலங்களைச் சாடும் இளமைக் குரலாக பெலிஸ்ரனின் கவிதைகள் விளங்குகின்றன. பெலிஸ்ரனின் கவிதைகளின் பேசுபொருள் வெவ்வேறு காலப்பகுதிகளுக்குரியனவோ என்றும் என்னுள் ஒரு கருத்தோட்டம் உண்டு. இக்கவிதைகள் வெவ்வேறு காலப்பகுதிகளில் எழுதப்பட்டவையால் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கலாம்.

மொழிகளின் அரசியாகக் கொள்ளப்படும் கவிதையைக் கையாளும் இலாவகம் பெலிஸ்ரனுக்குக் கைவரப்பெற்றிருக்கின்றது. வாசகனின் உணர்வை வருடும் ஊடகமாகத் தனது கவிதையைப் பெற்றெடுக்கக் கூடிய அனுபவத்தை பெலிஸ்ரன் தனது படைப்பாளுமையின் ஊடாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். தொடர்ந்து கவிதைத்துறையில் பயணிக்கும் போது இத்தகைய படைப்பாளுமையை அவர் பெற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கை விதையை இக்கவிதைத் தொகுதி எம்முள் ஊன்றியிருக்கின்றது.

**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**
(laleesan@gmail.com)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



"காலத்திற் கேற்ற வகைகள்- அவ்வங்
ஞாலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய்- எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை"
(சுப்பிரமணிய பாரதியார்)

காலமாற்றம் இயற்கை நியதி. காலமாற்ற சூழலில் நாம் பதித்த தடங்கள் தடயங்களாக இலக்கியம் பண்பாடு என்பனவும் "அலுமினிய மழை" என்ற கவிதை நூலில் எமது வாழ்வை பின்னோக்கி பார்க்க வைக்கின்ற இக் கவி வரிகள் ஒவ்வொன்றும் கனதியானது. இதன் வலுவைக் கண்டு இன்புறுங்காலம்; அனைத்திற்கும் மேலாக எமது கைகளில் கிடைக்கக்கூடிய அழகுக் கோலம் யதார்த்தமாகவே ஆத்ம உணர்வுகளை ஆகாசித்து விடுகிறது. காலச்சுவடுகளின் வழியில் அலுமினிய மழை தூறலாகவே உயிர் இழந்து தெவிட்டாமல் கண்ணீர் மல்கிய நிலையில் இனிக்கின்றது. முதல் பிரசவ குழந்தையாய் அமையும் இந்நூல் தமிழர் உணர்வுகளை தமிழ் ஆளுகின்ற நூலாக பரப்பெல்லாம் தொடர எல்லோரும் இன்புற்று வாழிய என வாழ்த்தி அமைகின்றேன்.

*திருமதி. ஆ. ஆன்மேரி குரூஸ்*
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்(ஓய்வு)*
*கல்வி அபிவிருத்தி*
*கல்வி நிர்வாகம்*
*மன்னார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயப்புரை



ஆக்கியோருக்கு ஒரு கருத்தும் நோக்கியோருக்கு வேறு பல கருத்துக்களையும் கூறி சுருக்கமான வசன நடையில் பெருக்கமான கருத்துக்களை நெருக்கமாக தன்னுள்ளே ஏற்று வாசிப்போரை சிந்திக்க வைத்து மனதை நெருடவைக்கும் ஒரு மந்திரமே கவிதை.

திரு சேசு பெலிஸ்ரன் சோசை அவர்களின் மனதில் தோன்றிய எண்ணக்கருக்களை புதுக்கவிதைத் தமிழில் வடிவமைத்து நூலுருக்கொடுத்து வெளியீடு செய்வதை நாம் பாராட்டுகின்றோம்.

இவரின் "அலுமினிய மழை" எனும் முதலாவது கவிதை நூலானது எமது வங்காலையின் முன்னாள் பங்குத்தந்தையான
முற்றும் துறந்த ஞானியும்
செக்கச் சிவந்த மேனியும்
சுறுசுறுப்பில் தேனியுமாகிய அமரர் மேரி பஸ்ரியனின் நினைவேந்தல் நாளாகிய 6/1/2020 அன்று அவருக்கு சமர்ப்பண நூலாக மலரவிருப்பதை நாம் வரவேற்கிறோம். இவரின் இம் முயற்சியை தொடர்ந்து மேலும் பல கவிதை புனைபவர்கள் வங்காலை மண்ணில் உருவாக வேண்டும் என்பதே எமது அவா!

இவரின் கவிதைத்தொகுதியில் என்னைக் கவர்ந்த ஒரு சில கவிதைகளை சேர்க்கும்போது "அலுமினிய மழை" எனும் கவி வரிகளில் "அக்கினி குளிரில் குடையோடு போகின்றவர்கள் எம் தலைவர்கள்" எனும் வரிகள் போர்ச்சூழலில் எம் தலைவர்கள் மக்களுடன் இருக்காது எங்கோ ஓடி ஒழிந்து வாழ்ந்ததை சுட்டிக்காட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரம்" எனும் கவி வரியில் தம்மைப்பெற்று வளர்த்து பெரியவராக்கிய பெற்றோரை அவரின் வீட்டில் இருந்து விரட்டி வயோதிபர் இல்லத்தில் சேர்த்து விடும் பிள்ளைகளைப் பற்றி சாடியிருக்கிறார்.

"நீதிமன்றம்" எனும் கவி வரியில் தீர்ப்பை வழங்காது தவணை போட்டு பணம் சம்பாதிக்கும் நீதிமன்றத்தை குறிப்பிட்டுள்ளார்.

"மாடுகள்" எனும் கவி வரியில் ஆறு அறிவு மனிதரை விட ஐந்தறிவு மிருகங்கள் சிறந்தது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

"விபத்து" எனும் கவி வரியில் "நாக்கு நுனியில் நறுந்தேனும் நெஞ்சகத்து தீக்கிரிய கஞ்சும் நிலைபெற்ற தீக்கிளைந்தாள்" என்பது போன்ற குணமுடைய பெண்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

"சண்டை" எனும் கவி வரியில் மதுவிற்கு அடிமையாகிய கணவர்களால் குடும்பத்தில் ஏற்படும் குழப்பத்தை கூறியுள்ளார்.

"சிறை" எனும் கவி வரியில் மட்டை வேலி இருந்த வேளை கிராம மக்கள் ஒரே குடும்பமாக வாழ்ந்ததையும் நவீன யுகத்தில் உயர்ந்த மதில்களுடன் கூடிய வீடுகள் அமைத்து குடும்ப உறவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதை விளக்குகிறார்.

"சடலவிளைச்சல்" கவி வரியில் மன்னாரில் தோண்டியெடுக்கப்பட்ட மனித புதைகுழியைப்பற்றி குறிப்பிடுகிறார்.

"ஓட்டைகள்" எனும் கவி வரியில் மனித நேய சட்டங்கள் புரட்டப்படுவதை சாடியிருக்கிறார்.

"போராட்டம் தொடரும்" எனும் கவி வரியில் போராட்டக் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் சிறை சென்றோர் திரும்ப வராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பாராளுமன்றம் போவதற்கு தவறாத எமது தலைவர்களைப்பற்றி எழுதியுள்ளார்.

"ஆண்மை" எனும் கவி வரியில் தொடருந்து பேருந்துகளில் முதியோருக்கும் பெண்களுக்கும் இருப்பதற்கு இடம் கொடுக்காது பயணம் செய்வோரை சாடியிருக்கிறார்.

"வன்மம்" எனும் கவி வரியில் இளம்பெண்களை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தும் காமுகர்களுக்கு துணைபோகும் வக்கீல்கள் அரசியல் தலைவர்கள் பொலிஸ்மார் போன்றவர்களின் செயல்களை விளக்குகிறார்.

இவ்வாறாக ஒவ்வொரு கவிதை வரிகளும் பல நூறு கருத்துக்களை சிந்தனைகளை எமது மனதில் பதிய வைக்கிறது. இவை போன்ற இன்னமும் பற்பல கவிதை நூல்கள் இவரிடம் இருந்து பிறக்க வேண்டும். இந்த கறுப்பு வைரத்தை மேலும் பட்டை தீட்டினால் பல் மடங்கு ஒளிவீசும். இவருக்கு இறைவன் நீண்ட ஆயுளை வழங்க வேண்டும்.

வாழ்க கவிதைத் தமிழ் வளர்க அதன் புகழ்

***திரு.பற்றிக் லெம்பேட்***
***போசகர்***
***புனித ஆனாள் கலாமன்றம்***
***வங்காலை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பண உரை

உலக வாசிப்பின் ஒவ்வொரு கட்டங்களிலும் நம்மை நாமே ஏதோ ஒரு விதத்தில் ஏதோ ஒரு பாதையில் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த வளர்ச்சி எத்தகையது என்பதை சமுதாய கண்ணோட்டத்தில் பரீட்சையப்படுத்தி முன் நுகர்வுகளுக்கான எம் வாழ்வியலுக்கான சமுதாய அங்கீகாரம் தீர்மானிக்கின்றது.

"அலுமினிய மழை" எனும் இந்த நூலை எம் வரலாற்றுப் பங்குத்தந்தை அமரர்.அருட்பணி மேரி பஸ்ரியான் அடிகளார்க்கு சமர்ப்பணம் செய்வதையிட்டு பேரானந்தமும் பெருமையும் அடைகின்றேன். கடந்த 35 ஆண்டுகளை போரியல் வரலாற்றில் எம் கிராமத்திற்கு ஏற்பட்ட பாரிய சுவடுதான் அமரர் மேரிபஸ்ரியனின் நினைவு தினத்தில் அவரோடு சேர்ந்து நாமும் எம் சமூகமும் அவரின் அழியாத நினைவுகளினூடாகப் பயணம் செய்து கொண்டிருக்கின்றோம். அதனால் இந்நூலின் ஆட்சிப் பொறுப்பினை எங்கள் நினைவுகின் நிழலாய் விரித்து கொண்டிருக்கும் அமரர் பஸ்ரியனிடமே கொடுத்து இந்நூல் எக் காலத்திலும் அவர் நினைவுகளையே வளர்த்து ஊட்டம் பெறும் என அதீத நம்பிக்கை கொண்டுள்ளேன்!

இந்த வகையில் இது என்னுடைய இரண்டாவது சிறு முயற்சி! எழுத்தியற் பயணத்தில் எத்தனையோ பேர் நகர்ந்து கொண்டு போகையில் நானும் அவர்களின் விரல்களை பிடித்து நடக்க எத்தனிக்கின்றேன். இந்தப் பாதை எனக்கு இடம் கொடுக்குமா இல்லையா என்பதை என் சமுதாயமே தீர்மானிக்கும்! இந்த நீண்ட பயணத்தில் நானும் தொடர்ந்து பயணிக்க என் மனம் திடமாயிருக்கின்றது.

சமுதாயத்தின் நெளிவு சுழிவுகளைக் என் சிந்தனையில் உருக் கொண்ட வடிவங்களாய் "அலுமினிய மழை" என்னும் கவிதைத் தொகுதி இப்பிரபஞ்சத்தில் ஒரு சிறு நூலாக வெளிகைகொணர்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். அதைவிட எம் மக்களின் வாழ்வியல் கோலங்கள் காலத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் மாறுபடுகின்ற போதிலும் உரைநடையில் ஒரு கவிதை நடையாகக் பயணிக்கும் என் வார்த்தைகளின் தேடல்கள் நிச்சயமாக அனைவர் மனங்களையும் தொடும் என்கின்ற நம்பிக்கை எனக்குள் பிரவேசித்திருக்கின்றது.

போரின் வடுக்கள் எம் வரலாறுகள் தொடர்ச்சியாக வருவோருக்கு எடுத்தியம்புவதோடு மட்டுமல்லாது ஈழத்தமிழர் நிலைகொண்ட இடங்களையும் வடுக்களாக்கியதை ஏதோ ஒரு வகையில் எடுத்துக்கூற விளைந்திருப்பது என்னுடைய ஒரு சிறு முயற்சிதான் என்றாலும் இந்த அனுபவத்தில் நான் புதியவன் எனவே என் வார்த்தைப்பிரயோகங்களில் உயிர் இருப்பதும் இல்லாமற் போவதும் வாசகர்களின் மனங்களில் இருக்கிறது.

பலர் ஊக்கப்படுத்தியதோடு பலர் உதவிகளையும் செய்திருக்கின்றனர். அவர்களை என் உள் மனதின் ஆழத்தில் இருந்து என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.விசேடமாக இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய யாழ்ப்பாண தமிழ்ச்சங்க தலைவரும் பேராசிரியரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதிமுதல்வருமாகிய செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் அவர்களை நன்றியோடு நினைவுகூருகிறேன். அத்தோடு ஆசியுரை வழங்கிய எம் பங்குத்தந்தை அருட்பணி.மாக்கஸ் அடிகளாருக்கும் வாழ்த்துரை வழங்கிய முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி. ஆ. ஆன்மேரி குரூஸ் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு) அவர்களுக்கும் நயப்புரை வழங்கிய புனித ஆனாள் கலாமன்ற போசகர் திரு. பற்றிக் லெம்பட் அவர்களுக்கும் அத்தோடு எனக்கு பல வழிகளில் உதவி புரிந்த நல் உள்ளங்கள் அனைவருக்கும் என்னுள்ளத்தின் ஆழத்திலிருந்து மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்

*திரு. சேசு. பெலிஸ்ரன் சோசை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசியுரை | vii |
| அணிந்துரை | ix |
| வாழ்த்துரை | vii |
| நயப்புரை | vii |
| சமர்ப்பண உரை | vii |
| 1. அலுமினிய மழை | 01 |
| 2. புரியாத இசை | 05 |
| 3. பாரம்பரியம் யாருக்கு? | 06 |
| 4. வரம் | 09 |
| 5. நெய்தல் நிலப் பெண் | 10 |
| 6. உணர்வு | 12 |
| 7. தொலைந்த காதல் | 13 |
| 8. சுமை | 14 |
| 9. நீதிமன்றம் | 16 |
| 10. தொரைந்து போன மனிதம் | 18 |
| 11. என் கவிதை | 20 |
| 12. மாடுகள் | 21 |
| 13. கொக்குகள் | 22 |
| 14. புலித்தடம் | 25 |
| 15. தலைமைகள் | 28 |
| 16. சித்திரங்கள் | 31 |
| 17. காத்திருக்கின்றேன் | 32 |
| 18. அடையாளம் | 34 |
| 19. விபத்து | 36 |
| 20. சண்டை | 37 |
| 21. சிறை | 38 |
| 22. சாட்சி | 40 |
| 23. கனவு மெய்ப்பட | 42 |
| 24. சடல விளைச்சல் | 44 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. தீட்டுப்பட்டவர்கள் 46
26. முலாம் 48
27. வலிகள் 50
28. வெறுமையாய் 51
29. ஓட்டைகள் 53
30. வேங்கை 55
31. எதிர்வு கூறல் 57
32. அக்கினிக் குஞ்சுகள் 59
33. கனவுகளே கை கொடுங்கள் 61
34. உச்சம் போனவர்கள் 64
35. போராட்டம் தொடரும் 66
36. மாயை 68
37. நிராகரிப்பு 70
38. கவிதைப்பெண் 72
39. விழுந்தவர் குரல் 74
40. ஆண்மை 76
41. உவர் நிலம் 77
42. சட்டம் 78
43. சிலுவைகள் 79
44. வன்மம் 81
45. அறுவடை 83
நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுமினிய மழை

இருளத் தெரியாத வானத்தில்
முகில்களைத் தேடும்
சில முகங்கள்!

பொய்த்துப் போகிற மழைக்குப் பின்
பெய்யத் தொடங்கும்
அலுமினிய மழைக்குள்
அமிழ்ந்தவர்கள் பலர்!

கீச்சலிட்டு வரும் அக்கினிப் பறவைகள்
பீச்சி விட்டுப் போகும்
பிடரி மயிரும்
விசத்தூள்களாய்
வீசியெறியும்!

இரைச்சலோடு இருண்ட மழைக்குள்
இடியும் மின்னலுமாய்
எச்சங்களாய் விழும்
அமில மழையின்
இரத்தக் காட்டாற்றில்
தோய்ந்து, பிழிந்து,
சல்லடையாய்ப் போகும்
சடலங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரங்களாய் விழும்
உடல் விதைகளுக்கு
மேலும் கீழுமாய்
ஆவியுயிர்க்கிறது தரிசு நிலங்கள்!

வாழத்துடிக்கும் வாடகை இனம்!
அலுமினிய மழையில் உழுது,
நாசினிகளால் வேரூன்றி,
விசம் கொண்டு,
வீரியம் வளர்த்து,
செழுமை செழுமையாய்
அசேதனப் பச்சையில்
நகல் நாற்றுக்களை
அறுவடை செய்கிறார்கள்!

பிரதிச் சோறுண்டு
பிணி வளர்த்து
அந்தப் பெண் பெற்றாள்
ஒரு பிள்ளை
"நகலாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி பறவைகளின்
அமில முட்டைகளை அடைகாக்கும்
நஞ்சுண்ட நிலங்களின்
எச்சங்களைத் தாங்கி
எங்கள் வயிறுகள்
புண்பட்டு போகையில்
கர்ப்பப்பை கிழிசல்களின்
கன்னி கழியாமலே
மலடிகளாய் போகிறோம்!

இரத்தத் தூவானத்தில்
நிலம் சிவந்து
புற்களை மேயும் புழுக்களையும் உழுது,
பயிர் வளர்க்கிறோம்
எங்கள்
வயிறு வளர்க்க!

உணவுச் செரிமானங்களின்
உணரப்படா வலிகளையும் தாண்டி
பூக்காமலும்
பூப்படையாமலும் போகிறது
எங்கள் இனம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் வெடித்து சிதறிய
கந்தக மழையின்
அக்கினி குளிரில்
குடையோடு நின்றவர்கள்
எம் குலத் தலைவர்கள்!

காவலுக்கு வந்தவன்
கலைத்த கற்பை
ஜெனிவாவில் கேட்டு
ஜென்மம் போனதை
கண்டும் காணாமலும்
காகிதத்தில் புனைந்தவர்கள்!

விளைச்சல்களின் விலை பேச
தூர தேசம் போனவர்கள்
பேசி முடிப்பதற்குள்
பாசி படிந்து போனது வரலாறு!

உருக்குலைந்து போனவர்கள்
உலர்வதற்குள்
கருக்கொண்டு வருகிறது
மீண்டும் ஒரு
அலுமினிய மழை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரியாத இசை

கீழ்வானம் வெளுக்க
நிசப்த ஜனனங்களின் புலர்வில்
அந்த
நீண்ட குயிலின் இசை
மனதை உறைய வைத்து,
இனிமையாய், எளிமையாய்,
மனங்களை வருடியதாய்
பிரமித்துப் போகிறார்கள்
இன்னும்
கூவிக்கொண்டிருக்கிறது குயில்
தன்
குஞ்சுகளைத் தொலைத்து விட்டு......!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரம்பரியம் யாருக்கு

சாட்சிகளின்றி சாம்பராய்ப்போன
சடல மேடுகள்
எங்கள் தேசம்!

ஆக்கத்திறனின்றி
சிலர்
கூக்குரலிட்டும்
ஊக்கமில்லாதவர்களால்
ஒன்றுமில்லாது போனது
வன்னி மண்!

மாற்றான் நீதி சொல்லி
வேட்கை என்ற பெயரில்
வேசிகளாக்கினான்!
பேச எத்தனித்தும்
பல தேசம் நடுவில்
தாசிகளாக்கினான்!

பேய்கள் மலிந்த தேசத்தில்
நாய்களாய் நாங்கள்
குரைக்க குரைக்க
எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்வளை நெரிக்கப்பட
ஐநாவில் போய்
அந்நிய நாயானோம்!

புலம் பெயர்ந்து போய்
புலிப் பெயரில்
அகதி நாயானோம்!

காடுகள் ஊடறுத்து மீட்கப்போய்
மாடுகளாக்கப்பட்டோம்
முட்கம்பி வேலிக்குள்!

சலசலப்பு
சலனங்கள் ஏதுமின்றி
சருகுகளின் வாயடைத்தது
எங்கள்
சடலங்களின் பரம்பல்!

வலிந்து வலிந்து
எம்குலம்
நலிந்து போனது
"கொலைகள்" மலிந்து மலிந்து
எம் இனம்
இழிந்து போனது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையே போனபின்
பாரம்பரியம் யாருக்கு?
ஊழி காலமட்டும் - நெஞ்சில்
உளி செருகிய வலி
உணராமற் போய்விடுமா?

எங்கள் வலி சொல்ல
எத்தனை "வாலி" வந்தாலும்
வழியில்லாக்காலம்!

முப்பது வருட முயற்சி
எங்களுக்கு
வினையாகிப் போனபின்
முயற்சி திருவினையாக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரம்

முதியோர் இல்லத்தில்
முதற்படியில் இடறும் போது
தவமிருந்து
பெற்ற வரங்களும்
"சாபமாகும்"என்பதை
நிரூபித்தன பிள்ளைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெய்தல் நிலப் பெண்

உணர்வுகளுக்குள்
உறவுகளைப் புதைத்து
தன்னுணர்வற்று
வலிமையாகி நிற்கிறாள்
நெய்தல் நிலப்பெண்

பேரலைகளின் திட்டுகளை
துரும்பென கடந்து
குப்பையென வீசும்
சூறைக்காற்றுக்களில்
உருக்குலைந்து போய்
தொலைவில் தெரிவான்
குருவியளவில்!



எத்தனிக்கும் கணமெல்லாம்
தொலைந்து மீட்டதாய்
கரை மிதிக்கும்
அவன் சுவடுகளில்
காத்திருக்கும்
அவள் பெருமூச்சுக்கள்!
நுரையோடு விரையும் கடலலைகள்
பாதங்கள் புதைத்த
மண் சிதைவுகளை
செம்மையாக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில்
கசங்கிய சுழிவுகளை
பிய்ந்து போன தூரிகையின்
பிசிர் பிடித்த கறைகளாய்
கசங்கிப்போன தலைமுடிகள்
கருக்கலைந்த மேகங்களின்
உருக்குலைந்த சித்திரங்களாய்
வர
பார்வையால் கோதி
புன்னகையால் மெருகேற்றுவாள்!

காலங்காலமாய்
கரையேற எத்தனிக்கும்
அலைகளின் சாட்சியில்
எறி புயல் காற்றை
ஏறி மிதித்து
தார உணர்வறுத்துப்போவான்
தூர வழிப்பயணம்!

மீண்டும்
திரைகடல் ஓடி
திட்டுகளைத்தாண்டி
குப்பையாகிப்போவான்!

வருவான்
திரைகடல் ஊடறுத்துப் போக
காத்திருக்கின்றாள்
நெய்தல் நிலப்பெண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வு


பச்சிளம் குழந்தை
படிதாண்டி இடறி
மண்ணை முத்தமிட
மலடியும் பெற்றாள்
பிரசவ வலிகளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைத்த காதல்

என்றோ அவளால் கருவுற்றது
என்
காதல் கவிதைகள்!



உடன் பட மறுத்த
நிறையுடலியாகாத வார்த்தைகளால்
மேடுகளாய்ப் போன
என் காதல் கவிதைகளின்
கிழித்தெறிந்த
காகித குப்பைகளை
கிண்டி எறிகிறது
சில
கிழட்டுக் கோழிகள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமை

வீட்டின்
கருவூலங்களை நிறைத்திருக்கிறது
கருவறைகள்!

சுகமான சுமையுடன்
வயிறாய்
முதல் தொட்டில் தந்தாள்
பெண்
நடை தளர்ந்து போயினாள்!

கரம் பிடித்து கணவன்
நடை பயின்ற
நிலையென நின்றாள்!



நெஞ்சில் இடுக்கில்
முகம் புதைத்தாள்!
ஓராயிரம் வலிகளை
ஒரு நொடியில் இழந்தாள்!

மனை மகள் நிலை கண்டான்
அடிச்சுவடு நோகா
நிழலோடு நீந்தினான்!
அடி வயிறு கனத்தான்
ஆடவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்புகளின் வேதனையில்
ஊமையாய்ப்போன
உதடுகளின் ஏக்கம்
இமைக்குள் பிறந்தன!

அம்மா எனும்
தேவலோக தேடலுக்காய்
அடக்கிய வார்த்தைகளை
எச்சிலாய் உமிழ்ந்தன கண்கள்!

அகத்திணையானவள்
புறத்திணையோடு போரிட்டாள்
வாகை சூடி பெண்
வயிற்றில்
வைரத் தொட்டிலில்
தன்
பிஞ்சு மகவோடு போரிட்டாள்
பஞ்சணை மெத்தை
பிய்த்தெறிந்தாள்!

ஆதாரம் அவள் தான்
படபடத்தான்!
பயந்தான்!
புருவங்கள் உயர்த்தி
புலப்பட்ட நீர்த்திரள்
விரல்களுக்குள் செருகினான்

கர்ப்பவதியின் கணவன்
கட்டிலோரம் காத்திருக்கிறான்
கர்ப்ப வேதனையுடன்.......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றம்

வழக்கு முடிக்கச் சொல்லுங்கள்!
இருட்டறையில்
இரும்புச்சிறையில்
எம் கணவன்
காலாவதியாகு முன்!

தவணையும் தண்டமும்
வாய்தாவும் நானுமாய்
வலுவிழந்து போயினேன்
வழக்கு முடிக்கச் சொல்லுங்கள்!

கையில் குழந்தையுடன்
சமுதாயச் சிறைக்குள்
வசதிக்கட்டணத்தில்
ஒரு வாழ்க்கை!

நீதி புலப்படாத நீதி மன்றத்தில்
வாயில்லாத தேவதைக்கு
கையில்
வாளெதற்கு?
கண்ணியில்லாத தேவதைக்கு
கையில்
தராசெதற்கு?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகளே
சற்று விலகிடுங்கள்!
என் பணம் பேசப்போகின்றது.

நீதி மன்றம்
அமைதி!
தவணையின்றி மீட்டாள்
கண்ணகி தன் கணவனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைந்து போன மனிதம்

மனிதம் புலப்படாது போனது
மனிதத்திற்கு
புலப்பட வாய்ப்பில்லை!

இடறியவன் கண்களில்
இடறப்பட்டவன்
மனிதனாக தெரிவதில்லை!

தான்
மிருகமென்றுணராது
மனிதனாகிறது சில
மனித மிருகங்கள்!

தான்
மனிதமென்றுணராது
மிருகமாகிறார்கள் பல
மிருக மனிதர்கள்!

மனித மிருகங்களின்
அனர்த்தங்களில்
அஸ்தமித்துப் போகின்றது
சில
மிருகங்களின்
மனித வாழ்க்கை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரங்குகளின் எச்சத்துண்டுகளின்
கூர்ப்புக் கொள்கையில்
மனித உருவங்கள்
பூமியை உதாசீனப்படுத்த

ஏதேன் தோட்டத்தில்
அந்த களிமண்ணிற்கும்
விலக்கப்பட்ட கனிக்கும்
இடையில்
அப்போதே தொலைந்து போனது.
மனிதம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கவிதை

என் புதுக்கவிதையின் குழந்தைகளோடு
காலாற பயணிக்க,
எதுகை மோனையில்
சிலேடைகள் கலந்து,
நான் செதுக்கிய
மரபுக்கவிதை
இடக்கரடக்கலாய்
ஊடறுத்துப் போகிறது
தன்
இரு குழந்தைகளுடன்.......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடுகள்

மாடுகள் போட்ட
ஒற்றையடிப் பாதையில்
மனிதர்கள் செதுக்கிய
முட்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குகள்

ஆழ்கடலும்,
ஆவேச அலைகளும்
தீர்மானிக்காத
எங்கள்
வாழ்வின் நகர்வுகளை
சில
வலைகள் தீர்மானிக்கிறது!

மீனவன் வாழ்வு
பாதி மீனுக்கே
பல பரித்தியாகத்தோடு
நிறைவுபெறுகிறது!

செருப்புகளுக்கு இடங்கொடாத
சேற்று நிலங்களோடு
புதைந்து புதைந்து
விடிவதற்குள் முன்
இருண்டு விடுகிறது
சில பொழுதுகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளின் இரைச்சல்
கரிக்குருவியின் கீச்சல்
சில் வண்டுகளின் சிணுசிணுப்பு
சில நரிகளின்
ஊளைகளையும் தாண்டி
ஓடை மீன்களின்
உமிழும் தெறியலில்
கடன் காரன் தெரிவான்!

சல்லடைகளால் சலித்த பின்னும்
ஏமாற்றும் தெறியல்களில்
விரல்கள் சேறு பிசைந்து
ஏதோவொன்றை
எத்தனிக்கும்

சாரை சாரையாய்
நாரைகள்
ஓடைகளை உரசிவிட்டுப் போகும்!
ஏக்கமாய்
துலாவிக் கொண்டிருக்கிறது
இந்த குருட்டு கொக்குகள்!

அக்கினி வெயிலில்
அகோரத் தாண்டவத்தில்
இடைக்கச்சை
தலைப்பாகையாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றில் அமிழ்ந்த
பீத்தல் கண்ணிகளை
கூட்டி அள்ளி
தோளில் போட
அழுது கொண்டே போகும்
அந்த வலை!

அரை நிர்வாணமாய்
துயிலுரிந்து
இன்னுமொரு இடைத்தூரம்
இடம் பெயரும்
இந்த
ஏழைக் கொக்குகள்
சில ஓடைகள் தேடி.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலித்தடம்



கைநெகிழாக்காலங்களில்
அவசரமாய்
கையுயர்த்தி விடுகிறது
அவசர கால சட்டம்!

இருட்டறைகளில்
உருட்டிய தாயக்கட்டைகளானது
எம்
தாயகத்தின்
சட்டமூலம்!



அருண்ட காடுகளில்
வெருண்ட மாடுகளுக்காய்
மிருகவதைச்சட்டம்
இருண்டது காடு!



புறவினத்தார் போட்ட பாதையில்
அன்னிய மொழி பேசி
அடிக்கொரு
சாவடி கடந்து
சோதனைகள் தாண்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிக்கப்பட்ட
தேசத்தில்
வாழ வழியின்றி
வாழா வெட்டிகளாய்
புலிப்பெயரில்
பெரியதொரு தடம்
பதித்தவர்கள்!

படை படையாய்
சங்கிலியன் படையணியாய்
கூரைகளை பிய்த்தெறிந்து
குண்டுகளால்
கூரையிட்டவர்கள்!

புலி வளர்த்தவர்கள்தான்
பூனை தடத்திற்கும்
பயந்தவர்கள்!

மண்ணுக்காய்
விழுந்து போராடிய
சொந்த மண்ணில்
மண் விழுந்தது!

புலித்தணிக்கை அமுலாகி
ஊடகங்கள் மாண்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி வளர்த்த ஊடகங்கள்
வயிற்றில்
புளி கரைத்தது!

உச்சரித்துப் பார்க்கவே
எச்சில் விழுங்கின
சில
அச்சூடகங்கள்!

அறுதியில்
தமிழும் புலம் பெயர்ந்து
போகிறது
தமிழனோடு!

முறையறிந்து போன தடம்
முறைதவறிப்போனது!

வாழ்வதற்காய் செத்தோம்
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
புலிப்பெயரில்!

அதோ
கழிவறை போகிறான்
என் மகன்
காலில் செருப்புடன்
புலித்தடம் பதியாமலிருக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைகள்

கட்சிக்கொரு விஞ்ஞாபனம்
காட்சிப்படுத்துங்கள்!
உச்சிக்குப் போகும் வரை
உயிர் கொடுத்துப்!
புன்னகையுங்கள்!

யாசகங்கள் பெற்று
வாக்கு வங்கி நிறையுங்கள்!
வேசங்கள் போட்டு
பல
சூசகங்கள் புனைந்து
நிற்க
ஆசனங்கள் பறியுங்கள்

அண்டை மொழி
வீட்டாரிடம்
அண்டிப் பிழைத்து
உங்கள் கதிரைகளை
காவுங்கள்!

நீங்கள்
கால் பிடித்தீர்கள்!
அதனால்
நாங்கள்
வால் பிடித்தோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழைந்து போனது
எங்கள் சோறு மட்டுமல்ல
நீங்களும் தான்!

இனத்துவேசிகளால்
ஈனப்படுத்தப்பட்ட
இருண்ட தேசத்தின்
தூசிகள்
எங்களை துடைத்தெறியுங்கள்!

நீங்கள்
சத்தமிட்ட மேடைகள்
சந்திகளில் சிரிக்கிறது!
சுய நிர்ணயக் குரல்
உங்கள்
தொண்டையில் சாகக்கிடக்கிறது!

நீங்கள்
பேசத் திராணியில்லாத
பிராணிகளாய்ப் போனாலும்,
எங்கள்
சந்துகளில் பிளந்து போன
வடுக்கள்
சந்ததிக்காய் பேசும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களால் நோயுற்றோம்!
அதனால் பாயுற்றோம்!
விதி செய்ய எண்ணி,
வீதியிலே சாய்ந்து விட்டோம்!

நாய் குரைக்கிறது!
யாரவன்?
நான்காண்டு முடிவதற்குள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரங்கள்

மதலைக் கரும்பின்
பல் உதிர்க்காத பருவ இதழ்களின்
மினுமினுத்த உதடுகள் இருக்கின்
ஊற்றெடுத்த,
ஊளைத்தேன் மிரண்டு
பிஞ்சுக் கரங்களால்
என் முகம் தடவும்
அமுதத் தூரிகையால்
வரையப்பட்ட சித்திரங்கள்
அழகின் வர்ணணை
புல்லரிக்கின்றது!
என் மனங்களில்
பிரகாசமாய்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருக்கின்றேன்.

வானவில் சேலையில்
உடுக்களை நெய்து
என்
விழியின் வீதி வழியே
நீ பயணிக்கும்
ஒவ்வொரு வினாடிகளும்
உணர்விழந்து போகின்றேன்!

எத்தனை நாளுக்கு
நான்
கனவுகளை கட்டியணைத்து தூங்குவேன்!

நீ வந்துபோன
கனவுக்குள்
நான் வியர்த்து விறுவிறுத்து
களைப்படைந்து போகின்றேன்!
நீ
வந்து போகும் கணங்களில்
தாயாகிப்போகிறேன்!
நாய் குலைக்கும் போதெல்லாம்
என்
வீதியின் மருங்குகள்
என் பார்வையில்
நிறைந்திருக்கும்!
உன் வார்த்தை பயணத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலில் தொங்குபவன் நான்
பதிலுக்காய்!
விழிவிடு! இன்றேல்
வழுக்கி விழச்செய்!

உன் காதலால்
என் இதயம் கருவுற்றுப் போயிற்று!
காலக்கெடு முடிவதற்குள்
கைகொடு! அல்லது
கைகழுவி விடு!

நிதர்சனங்களை யாசி
யதார்த்தங்களை நேசி
ஒளியேற்றுவாயென!
விளக்கோடு அலையும் நானுனக்கு
விதி விலக்கல்லவே!

நீ உணராத வரையில்
காதலும் அந்த கடவுளும்
உனக்குப் பொய்தான்

காத்திருக்கின்றேன்
உன்னால் வரும் கனவுகளை தொலைத்து
நீ தரப்போகும்
தரவுகளுக்காய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம்

வாரத்திற்கு ஒரு முறை
வதிவிடத்தை உறுதி செய்கிறேன்!

வரிசைப்பிரகாரம்
நாங்கள்
வந்தேறு குடிகளென
சில நரிகள் ஊளையிட
அடையாளத்தை தொலைத்து விட்டேன்!

கூட்ட நெரிசலில்
சிதறுண்ட அடையாளம்
திசைமாறிப்போகிறது
எம் உறவுகளோடு!

துப்பாக்கிகள் துப்பிய
எச்சில் துகள்களில்
வடுக்களாய் போன என்
தோல் துணிகளை
துலாவித்திரிகின்றேன்!

வேலிக்குள் விசாரித்தும்
விடை தெரியவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்கு எட்டிய தூரம்
என்கண்ணும்
தொலைந்து போயிற்று!

தேசிய அந்தஸ்து
தேடித்தந்த அடையாளம்
கொல்லைப்புறத்தில்
கூழத்தோடு கூழமாய்
கண்டெடுத்தேன்!

ஆயினும்
சடலமாய் நிற்கின்றேன்
என்
அடையாளம்
தொலைந்து போய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்து

பூகம்பத்தையும்
புயல் காற்றையும்
கசக்கிப் பிழிந்து வடிந்த சாறாய்
தென்றலாய் தெருவில்
என் முன் கடந்து போகிறாள்!

என் கண்ணிரண்டைப் பிடுங்கி
அவள் கைப்பையில் இட்டாள்!
வாகன நெரிசலில்
வழிதவறியவனாய்
சக்கரங்கள் திசைமாற
விபத்தாகிப் போன என்
வாகன உதிரிகளை
பொறுக்கிச் சேர்க்கின்றேன்!

அவள் நினைவுகளால் நொறுங்குண்ட
என்
இதயத் துண்டுகள்
வீதியில் சிதறியதை
பொறுக்காது போகின்றேன்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டை

பசியோடு வந்தான்
வீட்டுக்கு!
பானை பறந்தது
ரோட்டுக்கு!
அவன் பசியோடு சேர்த்து!

போதையில் வந்தவன்
விளக்கம் தெரியாமல்
வீதியில் கிடக்கிறது
பானைகள்
இன்னும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறை

மறத்தமிழன் வாசனை
மூன்று வீடுகள் தாண்டி வீசும்
ஒரு கோப்பை கறியில்!

உறவுகளை
சில வேலிகள் வரையறுத்தாலும்,
நீக்கப்பட்ட மட்டைகளில்
ஊர்க்கதைகள் ஊறியிருக்கும்!

ஒரே குரலில்
ஒன்பது வீடுதாண்டி
பதில் வரும்!

உப்பும் புளியும்
ஒரு சமயம் சொதியும்
ஓட்டை மட்டைவழி
ஓடித்திரியும!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும்
புலர்ந்து போன
எங்கள் எண்ணங்களின் அனர்த்தத்தில்
எம்
கலாச்சாரம் கருவறுந்து போனது!

மரங்கள் மறைத்த
மதில்கள் உயரத்தில்
மானுடம் மறைந்து போனது!

வீடுகள் உயர உயர
சிறையானான் தமிழன்
நான்கு சுவர்களுக்குள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சி

நண்பனே!
எங்கள் விசுவாச வேர்களை
அறுத்தெறிந்து,
விழுமிய விழுதுகளை
உடைத்தெறிய எண்ணியிருப்பாய்!

குருதி மழையிலே
வீதியெல்லாம் வெள்ளம்
மரண ஓலங்களை
இசையோடு எம் சடலங்களை
அசைபோட்டு வருமென
அறிகுறி கண்டிருப்பாய்!

சந்திக்கு சந்தி
எங்கள் சந்ததிகள்
செத்து மிதக்கு மென
லயித்திருப்பாய்!

குண்டுகளின் அலறலில்
பிண்டங்களாயப் போன
அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்சுக் குழந்தைகளின்
குருதிக் குமுறலில்
உலகையே வென்றதாய்
உணர்ந்திருப்பாய்!

எம்
விசுவாச சாட்சியத்தின்
விதையானோர் பட்டியலில்
உன் பெயரும் வருமென
கனவிலாவது நினைத்தாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு மெய்ப்பட

மோதலில் புறந்தள்ளி
மொழித்துவேசம் கண்டெம்மை
சாதலின் நன்றென
சங்கு நெரித்திடும்
பாதகர் செய்வினை
பார் எரித்திட வேண்டும்!

திக்கெட்டும் பனை மூட்டம்
எளிமையாய் நின்ற மண்ணில்
கொட்டைகள் தேடி போய்
குண்டு பொறுக்கிய
கொலுவேந்தர் குலம்
குவலயம் நினைக்க வேண்டும்!

தமிழென்றால் புலியென்று
தடம் கொண்ட எம் மண்ணில்
திமிருக்கும் அவனென்று
திண்டோள் வலியுவர்கள்
மூளை விறல் கொண்டு
முளை விட்டு எழவேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்திலே கசக்கி விடும்
பால் நிலைப் பாதகரை
கழுத்திலே மிதித்து வர
கால் கொண்ட நங்கையரும்
குளித்தால் குறை நீங்கும்
குணம் கொண்டு வர வேண்டும்

பெண்ணினமே பெண்ணினத்தை
பேதமை கொலை செய்து
கருக்குழந்தை உருக்குலைக்கும்
காமத் தீ கருகிடவே
பாரதியும் வர வேண்டும்
அவன் பார்வை பெற வேண்டும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடல விளைச்சல்

பூமித்தாய் உண்ட
சடல எச்சங்களை
கொப்பளிக்கிறாள்
எலும்புத் துண்டுகளாய்!

புழுக்களே புக முடியாத
இரத்த நிலங்களுக்குள்
ஊடுருவிப் போகிறது
ஜனநாயக கொலைகள்

தோண்ட தோண்ட
துளித்து எழுகிற
சடலக் குழந்தைகளுக்கு
அந்த கால சங்கிலியன்
பெயர் கொடுத்திருக்கின்றான்!




உருந்து போன
உருத்திராட்சைக் கொட்டையில்
இந்துக்களாய் போனது
சில சடலம்!
உருக்குலைந்த கம்பிச் சிலுவைகளின்
கிறிஸ்தவர்களானது
சில சடலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகிப் போன மனித உருக்களின்
கூட்டுத் தொகையில்
கழிந்து போனது
தமிழனின் சடலம் மட்டுந்தான்!

கொலைகளின் முன்னணியில்
தமிழன்
பின்னணியும் அவன்தான்!

காணாமற் போனவர்கள்
காணாமல் ஆக்கப்பட்டார்கள்!

புவியியல் சரித்திரத்தில்
என்றைக்கும்
எங்கள் மண்
விளைவித்த சடலங்கள்
தற்கொலை செய்யப்பட்டவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீட்டுப்பட்டவர்கள்

அந்தி வானம் இருட்டு முன்
எண்ணங்களை குருடாக்கி
இயற்கை எய்துமுன்
விசாலமாய் பாருங்கள்!

தீட்டு,
தீண்டத் தகாதவைகள்,
என்பதெல்லாம்
வீட்டுக்குள் ஆகிறது
வெளியில் கொட்ட
குப்பைகளாய் போகிறது!

என் காமத்தீயின்
அக்கினிச் செழும்பில்
விந்தில் உறைந்தவன்
குந்தியிருந்த ஒரு கணப் பொழுது
ஒன்பது மாத தீட்டோ???

வந்தவழி தீட்டென்றால்
வாழும் வழி தீட்டே!

மாதவிலக்குடன் ஒரு பெண்
மலர்கிறாள்
வேத முறைப்படி தீட்டென்றால்,
வேதமும் தீட்டே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி தெரியாத கருவறைகளை
சமயம் பார்க்காத வயிறுகள்
சுமக்கிறது!

குலம், கோத்திரம்
தெரியாத மனிதர்களை
தீட்டின் திரவப் படிமங்கள்
உருவகிக்கிறது!

பிறப்பதெல்லாம் தீட்டென்றால்,
பெற்ற தாய் தீட்டோ?

பெற்ற தாய் தீட்டென்றால்,
புத்தனும் தீட்டு!
யேசுவும் தீட்டு!
போதனைகளும் தீட்டு!

வார்த்தைகளால் கொல்பவர்கள்
பார்வைகளால் எரிப்பவர்கள்
மாசு படிந்த எண்ணங்களோடு
பிறப்பவர்கள்
தீட்டுப்பட்டவர்கள்!

புனிதமாய் வந்தோம்!
புனிதமாய் வாழ்வோம்!
புனிதமாய் போவோம்!

பாதை புனிதமென்றால்
பயணம் புனிதமே
தீட்டுப்பட்டவர்கள் பயணிக்காத வரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலாம்

முத்திரை பதிக்கிறது
சில
முகத்திரை படலங்கள்!

கத்தை கத்தையாய்
காசெறிந்து,
கலர் கலராய் தோலுரித்து,
புகை மண்டலமான
மனித உருக்களை
புகைப்படங்கள் மட்டுமே
தெளிவுபடுத்துகின்றது!

செங்கரும்பு தோட்டமாய்
சிலிர்த்து போகும் நடையில்
சீனி தின்னப்போகும்
மனித எறும்புகள்!

உதட்டு சாயங்களில்
உதிர்ந்து போகும் புன்னகையில்
ஒன்பது கலர் தெறிக்க
ஊனமுற்று நிற்கும்
உதடுகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஞ்சிய மருதாணி பாதங்களில்
பூ விழுந்த கோடுகள்
மிஞ்சிகளை களைந்தெறியும்!

அக்கினி பகவானின்
ஊதிய உஷ்ணக் கொதியில்
ஓரிரு வியர்வையில்
உதிர்ந்து விழும்
முகப்படைகள்!

குனிந்து போன பெண்ணியத்தின்
நிமிந்து நின்ற வரலாறு
குனிந்து கொண்டே போகின்றது!

பத்துகுட்டி போட்டவைக்கு
புலப்படாத கருத்தடைகள்
பாதிக் குட்டி ஈன்று
பாழ் வயிறு வெட்டிப் பிறந்தவன்
குறைப்பிரசவம்!

விஞ்ஞானி கோலத்தின்
அவனும்
விற்கப்போகிறான்
முகம் சிதைக்கும்
முலாம் டப்பிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகள்

நெஞ்சடைக்கும் வலிகள்
எங்கும் பரவியதில்
மஞ்சத்தில் கிடக்கும் மலர்ச்சரம்
மரணித்துப்போக!

விரல் தொட வீறிட்டுப் பாயும்
கண்ணீர்த் தாரைகளில்
மூழ்கி எழும்பும்
குரல் வளைகளில்
அப்பனாய் மகனாய்
ஆயிரம் உறவுகள்
முறிந்து சாய்ந்த மரமாய்
மனிதம் மடிந்து கிடக்கும்!

அர்த்த ராத்திரியில்
அழுது அசந்துபோனவர்கள் நடுவில்
இன்னும்
அழுது கொண்டேயிருக்கிறது
அந்த மெழுகுதிரி மட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறுமையாய்

அசாத்திய பொழுதுகளில்
முகம் சுழிக்கும்
புன்னகை வாசங்களில்
வண்ணங்களை தமதாக்கிய
குறுந் தேர்கள்
எங்கள்
கோயில் முற்றங்களில்!

சல்லடையாய் போன உள்ளங்களில்
இரக்க எண்ணை ஊற்ற ஊற்ற
ஒழுகிக் கொண்டே போகிறது
வீதிகளில்!

"பரிபாலனம்" என்பதை
பச்சை பச்சையாய்
கிழித்தெறிந்த
உமிழ்நீர்க் குமிழிகளை
துடைத்தெறிய மறுக்கிறது
எங்கள்
ஆன்மீக தேடல்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளில் விலக்கி விட்டு
கடந்து போன
"வாழும் கடவுள்கள்" வேடிக்கைப் பார்க்க
விதியென்று நாங்களே
விலங்கிட்டு
கைதிகளாய் போகிறோம்!

கோயில்களின் கோபுரங்கள் மட்டும்
எங்கள்
கூக்குரல் எதிரொலிக்க
கண்கள் காட்டுகின்ற
கலர் பிரம்மைகளில்
கடவுளைக் கண்டதாய்
வீடு வந்து சேர்கிறோம்
வெறுமையாய்!

மனிதர்கள் போல்
வேடம் பூண்டு
கோயில்களில் பிரண்டு
கருவூலங்களை கறைகளாக்கி
காலக்கிரயத்தில்
பூண்ட வேசம் கலைய
மீண்டும் மிருகங்களாவோம்!

இன்னும்
வெள்ளையடித்துக் கொண்டிருக்கின்றோம்
எங்கள் கல்லறைகளில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓட்டைகள்

சட்டங்கள் வாய்பிளக்கும்
குப்பை தொட்டிகளில்
எங்களை
அள்ளிப்போட்டு
குப்பையோடு குப்பையாய்
நகர்த்திப் போகின்றது
நகர காவல்கள்!

இரை தேடப் புறப்பட்ட
கொல்லைப் புற நாய்கள்
சீறிப் பாயும்
சில எலும்புகளுக்காய்!

நீதிகளின் படிவங்கள்
நியாயமின்றி
படிகளில் கிடக்கும்
பாவப்பட்டவர்கள் கால்துடைக்க!

காசு பணமின்றி
காவல் நிலையங்களில்
போகத் துணிகிறவன்
அழுக்கடைந்து வருவான்
எச்சில் முகத்தோடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களில் ஓட்டையாக தெரியாமல்
ஓட்டைகளில் தெரிகின்றது
சில சட்டங்கள்

சிலர் சாட்டைகள் தேட
சிலர் சட்டைப் பைகளில்
புகுத்திவிட்டுப் போகிறார்கள்
சட்டங்களை!

கார்க்காரர்களுக்கு
கதிரை போடும்
சட்டகப்பைகள்
எப்போதும் எதையும்
புரட்டிப் போடுகிறது!

வசதியற்றவன் போக
வாய்ப்பில்லாத இடத்தில்
வன்மத்திற்கு வழக்குகள் எழுதி
போத்தல்களுக்கு பின்னால்
புதைந்து போகிறது
போலீஸ் நிலையம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேங்கை

அந்த
நுரைகளின் தெறியலில்
அலறல் தெரிகிறது!

முக்கோணப் பார்வையில்
நரிகள்
நுகரத் தொடங்கும் முன்
நெருங்க மறுக்கும்
காக்கைகளின் அலசலில்
பின் வாங்குகிறது
ஊனத்தின் வடுக்கள்!

வருவதும் போவதுமாய்
நண்டுகளின் அசட்டையில்
விரிந்து கொண்டே போகிறது
குழிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டியும் முட்டாமலும்,
தட்டியும் தட்டாமலும்,
எழுந்து விழுந்து,
கால்வழி உருண்டோடி
ஈரத் துணிகளுடன்
இருப்பில் வைக்கிறது
நீர்த்துளிகள்!

ஆளரவமற்ற
வனாந்தர கரைப்பகுதி
அச்சுறுத்தும் இரைச்சல்களில்
உடையோடு ஒட்ட மறுத்த உடல்
குண்டேந்தி
கிடக்கிறது தரையில்
சடலமாய் அல்ல
சரித்திரமாய்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வு கூறல்

மரணத்திற்கான ஒத்திகை
கனவுகளின் முத்திரை
அது
இரவுகளின் நித்திரை!

தேடத் தேட தொலைந்து கொண்டு போன
கனவுகளின் எதிர்வு கூறல்
விட்டுச் சென்ற நிராசைகளின் அறிகுறியாய்
அழியாமல் தொடரும் சுவடுகள்!

மரணத்தை மலிவாக்கி
பெட்டிக்கடை வளர்த்தோமா?
பெட்டி கடை வளர்க்க
மரணத்தை வலிந்தோமா?

மாவரித்த சல்லடையில்
வண்டு வரும் கோணத்தில்
நோயரித்த சல்லடையில்
நாம் தெரிந்தோம்!

எங்களையும்
எங்கள் புதைகுழிகளையும்,
எவனோ ஒருவன் தீர்மானிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதண்டா வாதங்களாலேயே
விஷம் பட்டு,
விசனப்பட்டு,
காலாவதியாகும் முன்
வாழ்வை
கடன்பட்டு தொலைக்கிறோம்

உயிர் சாய்ந்து போன பின்
ஊசி போட்டு கல்லாக்கி
வண்டி கட்டி வருவோர்க்காய்
வாசலிலே காத்திருந்து
வேடிக்கை பார்க்கிறோம்

வாழத்தெரியாமல்
மாழுகின்றோம்
மாண்ட பின் வாழ்வதாய்
மனதை தேற்றுகிறோம்!

கனவுகள் மட்டுமல்ல
நனவுகளும்
மரணத்தின் ஒத்திகைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கினிக் குஞ்சுகள்

காக்கைகள்
மேயாத எருமைகளை
மேய்ந்து கொண்டிருக்கின்றன
காக்கைகள்!

ஏளனமாய் கரையும்
காக்கைகள்
கரையத் துணியாத
மனித மண்டைகளை
கொத்தி விட்டு போகிறது!

ஒரு கல்லில்
காக்கை விழுந்து நிமிர்வதற்குள்
உலக காக்கைகள்
சங்கமிக்கும் என் வளவில்!

என் இனம்
என் கொள்கை
என் பூர்வீகம் என்பதில்
எத்தனை இரைச்சல்கள்!

கரைச்சலுக்கு ஒவ்வாமல்
மீண்டுமாய் ஒரு கல்
மீண்டும்
எருமைகளாய் நாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலராத விடியலில்
கீச்சல்களின்
அதிர்ச்சியில் வெழுக்கும் அந்த வானும்
உப்பிட்ட மீனுக்கு
காவல் கிடந்து
கருவாடாய் போகும்
காக்கைகள் பொறுமை
காலத்திற்கு தெளிவில்லை!

பாதை போட்ட மனிதனுக்கு
பயணம் தெளிவில்லை!
பாதையின்றி பறக்கும்
பறவைகளுக்கு
பயணம் பொய்யில்லை.!

தாகமில்லாதவரை
தண்ணீர் தேடாத மனிதன்
தேவைப்படாத வரை!
தேடாத கடவுளை
செய்து வைத்த சிலைகள் மேல்
கழிந்து விட்டுப் போகிறது
காக்கைகள்

பார்வையில் காக்கைகள்
பறவைகள்
தீண்டிய கணங்களில்
தீப்பிளம்பாய் பரிணமிக்கும்
அவைகளும்
அக்கினிக் குஞ்சுகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகளே கைகொடுங்கள்


ஆழப்பதிந்து விட்டன
ஆழ்துளைக் கிணறுகள்!

குழி பறிக்கும் மனிதம்
தோண்டத் தோண்ட,
துயரங்களை நிர்ணயிக்கிறது!

மூடியில்லாமல் போனது
அந்த கிணறுகள் மட்டுமல்ல
எங்கள் மண்டைகளும் தான்!

கையிழந்து விட்டபின்
வாயிழந்து
கடவுளிடம் கேட்ட பின்
வந்தது பூ வாடி!

அதிர அதிரத் தோண்ட
ஆர்ப்பரிப்பாய் நினைத்ததோ?



புறத்திணை புகுந்த பூவை
இயந்திரங்களால் நெரித்து,
கம்பிகளால் காயமிட்டு,
கசக்கி,
பிய்த்தெடுத்து பிணவறையில் பரப்பினோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கிரையத்தில்
மரண வரலாறு கண்டவன்
காலமாகாமல்
கதை சொல்லிப் போனான்!

அரைச்சாண் நெஞ்சினன்
அவன் புதைந்து
என்னை தோண்டினான்!

வெண்ணிலவைத் தொட
அஞ்சாறு ஓடம் விட்டவனுக்கு
இந்த
பிஞ்சு நிலவு எட்டத்துணியாமல்
வாய் வெடித்த வீரத்தில்
வல்லரசுக் கனவு!
முகத்தில் கறை!

எலும்பில்லா வார்த்தைகளாய்
எச்சில் உமிழ்ந்த மழைக்காட்டின்
சேறாய்ப் போனவன் சுற்றம்
சேறாகிய போது
செத்தது நாம்தான்!

கை நீட்டிக் கேட்டவன்
கதறல் சத்தத்தில்
அண்டை நாட்டவன் கை நீட்ட
அண்ட விடாமற் போகையில்
தோண்ட விடாமல்
துவட்டிய பாறை நாம் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து நடப்போம்
இடறி விடாது!
இந்த எந்திர யுகம் செய்த
மனிதர்கள்
தோண்டத் தோண்ட
புதைந்து கொண்டே போகிறது
மனிதம்!

இனியொரு விதிசெய்ய
அந்த கிணற்றுப் படிமங்களில்
குந்தியிருந்து சிந்திப்போம்!

கனவுகளே கைகொடுங்கள்
எங்கள்
கைவலிக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்சம் போனவர்கள்

உச்சியில் நிற்பவனுக்கு
பார்வையில்
பச்சையாய்த் தெரிகின்றது
சில இச்சைகள்!

அதல பாதாளத்தின்
சொர்க்கத்தின் கானலில்
விழுந்தவன் எழுவதற்குள்
கழன்று விடும்
அவன் கச்சைகள்!

அவமானப் பொழுதின் புலர்வில்
மானம் கப்பலேற,
நெடிதுயிர்ப் பயணத்தில்
கத்தியில் நடக்கிறவன் கவனம்
காலில் இருக்கிறது!

மேசைகள் சிலேடையாய்
புத்தகத்தையும் போத்தல்களையும்
சுமக்க,
பார்வைக்கு ஒன்றும்
பருகுவதற்கு ஒன்றுமாய்,
புத்தகம் முடிவதற்குள்
போத்தல்கள் முடிந்து,
பிழைகளை மட்டும் வாசிக்கிறது
போத்தல் பிராணிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியில் நிற்பவன்
மச்ச இயந்திர பறவையானான்!

நடையில் மிருகவதம்
நட்பில் அசுரவதம்
பேச்சில் புழுத்திரண்ட சம்பவங்கள்
உருத்திரண்டு சீற,
பயணம் முடிந்த காட்டில்
பாதை தேடியவன்
விழுந்த இடமெல்லாம்
எச்சில் சிதறல்கள்!

மீண்டும் உச்சிக்கு போனவர்கள்
உமிழ்ந்து விட்ட
எச்சங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம் தொடரும்

என்று தணியும் எங்கள் ஏக்கம்
மன்றில் ஏறியும்
இன்று வரை எட்டாத
குஞ்சு நிலவுகளுக்கு
கொள்ளி வைக்கப் போகும்
விட்டில் பூச்சிகளாய்
வீதியில் கிடக்கிறோம்
நாதியற்று!

பெற்றவைகள் தொலைந்து
பத்தாண்டு போனாலும்
எங்கள்
பித்தப்பை சுமக்கும்
அந்த கர்ப்பப்பை வேதனையை!

கேட்க முடியாத கேள்விகளால்
வாய்ப்புண் வந்தவர்கள்
எம் தலைவர்கள்!

காடு புகுந்து வெட்டியவன்
வீடு புகுந்து சோறுண்டு
கழிவுத் தாகத்தால்
ஏப்பம் விட்டவர்கள் மேல்
இன்றும் இரத்த வாடை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசத்திறனின்றி போனாலும்
வீரப் பெண்கள் வீசும்
பார்வைகள் பேசும்
யதார்த்தத்தை
ஜனநாயகத்தை
மறந்து போன கொள்கைகளால்
மடிந்து போன உறவுகளை!

சீர் கொடுத்து
கட்டிக் கொடுத்த பரம்பரை
சீரழிந்து போய்
காசு கொடுத்தால்
காட்டியும் கொடுக்கிறது
கூட்டியும் கொடுகிறது!

வருவாயா மகனே
உண்ணா நோன்பிருந்து
கண்ணீர் கதை எழுதி
நாங்கள்
மண்ணாகிப் போகும்முன்?

பறையறைந்த குலப்புதல்வர்
சிறை நுகர்ந்து கிடக்கிறார்
எங்கோ ஒரு மூலையில்!
இன்னும் பைத்தியமாய் அலைகிறோம்
பாராளுமன்றம் போன
சில பைத்தியங்ளை நினைத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயை

வீதியோரங்களில் ஒதுக்கி விட்ட
பிச்சைக்காரர் நடுவில்
விலக்கி விட்டு போகிறது
சில்லறைகள்!

“அம்மா” என்ற சொல்லுக்கே திரும்பாத
செவிட்டு முகங்கள்
“அப்பனே” என
அழைக்காத குரலுக்கு
செவிகொடுக்கிறது!

கடைகளில் மட்டுமல்ல கலப்படங்கள்!
எங்கள் காணிக்கைகளிலும் தான்!
அதனால்,
கடவுள்களிலும் தான்!

பாவத்தின் சம்பளத்தை
பாவம்
இந்த சில்லறைகளை
மையப்படுத்தி
அதையே மயப்படுத்தி
மாயையாய் போகிறது வாழ்க்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்து போன கோயில்களில்
காசுகள் உருள,
கனவான்கள் பிரள,
வேத முறைப்படி சில
வித்தகம் புனைய,
கடவுள் மட்டும் ஏனோ
காணாமற் போய்விட,
பார்வைகள் விதைப்பதெல்லாம்
பரிசுத்தம்!
கடவுள் உன்னோடே இருக்கிறார்
கடவுள் இல்லாத இடங்களில்
நீ இல்லாத வரையில்!

ஒரு பரிட்சையம் இல்லாத பயணத்தில்
பணயம் என் வாழ்க்கை!

கடவுளிடம் போகிறவன்
பிச்சையிட்டு போகையில்
பிச்சையிட்டவனே கடவுள்
பிச்சைகாரனுக்கு!

வயிறு காய்ந்தவன்
எங்கோ ஒரு மூலையில்
வாடிக் கிடக்கிறான்
சில்லறைகள் மட்டும்
சந்நிதானத்தில்
என்ன வரம் கேட்கிறதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிராகரிப்பு

எம் உடல் பொருள்
ஆவியெல்லாம்
ஊமையாய் உலவுகையில்
ஒன்றுமில்லா ஜடமாய்
கர்ப்பவிக்க வேண்டாம்!

என் தேசமே என் சிறை
அதுவே சேதமாக்கி
இருட்டு வீட்டிற்குள்
எடுபட்ட கூக்குரலில்
பழிமுடித்து நான்
பலிக்கடாவாகிவிட
கர்ப்பவிக்க வேண்டாம்!

காடு கடந்து
நாடு கடந்து
கடவுச் சீட்டுக்களின்றி
ஆடவி நிறைத்த வான் குருவிகளின்
வந்தேறு குடிகளென்ற
வசை மொழி இல்லாது
வாழும் நிலை
நிலையாத எனை
கர்ப்பவிக்க வேண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாள அட்டையில்லை
சாவடிகள் கிடக்கிறது
திணவெடுத்த தோழ்களுடன்
திரண்டு போகும் மாடுகள்!
நகர முடியமல்
நடை பிணமாய்
நானும் கால் நடையாய்
வீதியில் நிற்க
கற்பவிக்க வேண்டாம்!

கற்பத்தில் அழித்து விடு,
அன்றேல்,
மிருகமாய் வளர்த்து விடு
வாழ்ந்து விட்டு போகிறேன்
நாட்டு விலங்குகளுடன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை பெண்

என் கவிதையின் கனவு மங்கையே!
உன் நவரச தீயில்
வேகத் துணிந்தவன் நான்!

உன் வார்த்தைப் பிரயோகங்களால்
என்னை வசைபாடு!

உன் பார்வையில் ரணங்களில்
என்னை நீயே
துயிலுரி!

உன் பரிசங்களால்
என் தலைகோது!

உன் வார்த்தை முத்தங்களால்
வருடிய வசனங்களில்
மொச்சை மணக்கட்டும்
என் நுகர்வு கலாச்சாரம்!

என் நெஞ்சில் நட!
நாவை மிதி!

துன்புறும் போதெல்லாம்
இன்பமாய் பரிணமிக்கும்
வசனங்களை வாசி!

வருட வருட சிலிர்க்கும்
இருதய உரோமங்கள்
மூச்சிறைத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் சாகும்!
தீண்டு!

நான் மூங்கில்
உன் உதடுகளின் எச்சில்
நுகர்ந்த காற்றில்
என்னை ஊடுருவிப் பாய்
மீண்டும் மலர்வேன்!

புள்ளிமான் தோலுரித்து
போர்த்தியவன் நான்!
உன் தடியடிப் பிரயோகங்களை
என் மேல் நடத்து
இடியாய்,மின்னலாய்,இசையாய்
கவிதையாய் சொரிவேன்!

உன் மரபுக் கூந்தலால்
வாரி கோதி
கொங்கைகளின் இடுக்கில் கொட்டு!
குளிர் நிலவில்
காதலன் கை கொடுத்த
கவிதைக் குழந்தையோடு
காலாறப் பயணிப்பேன்!

நீந்தி வா!
என் விரல்களின் நுனியில்
சறுக்கி விழு!
அந்த எழுது கோல்
புணரும் காகிதங்களில்
கருவுற்று இருப்பாய்
கவிதையாய் நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழுந்தவர் குரல்

மருது பாண்டி குலப் புதல்வர்
மறத்தமிழன் வீழ்ந்த நிலம் ஈழமோ?

பழி முடித்த பகைவர் மண்ணை
அழித்து விட்ட காலம் செத்து மாழுமோ?

மலையளவில் மாண்ட தமிழன்
சாவை எங்கள் சர்வதேசம் கேளுமோ?

அறம் புனைந்த சருகுப் படை
திறன் மறந்து தீயில் வெந்து சாகுமோ?

புலம் பெயர்ந்து போன புகழ்
நிலம் புலர்ந்து மீண்டும் வந்து சேருமோ?

தொழுது வேண்டி உயிர் வளர்க்கும்
பழுது பட்ட மானமினி வேகுமோ?

பால்பருகும் பச்சை மண்கள்
இரத்த ஆற்றில் நீந்த கண்கள் பார்க்குமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்குலைந்து வேங்கைப் பெண்கள்
கரிக்குடலை ஏந்துவது சாபமோ?

அப்பன் போட்ட பிச்சை உயிர்
அவன் மடிந்து பார்க்க நெஞ்சு தாங்குமோ?

குண்டு மழைக் காட்டில் மேயும்
குரங்கு அலப்பும் சத்தம் காதில் கேளுமோ?

வேட்டைக்காரன் விசை வலையில்
வீழ்ந்த அன்னம் விலங்குடைத்து மீழுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்மை

புரியாத வார்த்தைகளின்
இசையோடு பயணிக்கிறது
புகை வண்டி!

ஓடுகிற மரங்கள்
ஜன்னலோர இருக்கைகளை
கண்குளிர்த்து போகின்றது!

உள் மனது இறுக்கத்தில்
உதாசீனமாய்
தரிப்பிடங்கள் கடக்க,
இடங்கொடுக்க நினையாத
ஊனமுற்றவர்களாய்
ஈரமில்லாது பொருக்கு வெடித்திருக்கிறது
இதயம்!

முதுமை வலி தந்த
முதுகு வலியோடு
ஸ்தம்பித்து அசைய
கை கொடுக்கிறது
கம்பிக் குழந்தைகள்!

இடமிருந்தும் மனமில்லாத
புகைவண்டி
நகர்ந்து கொண்டே போகிறது
தன்
ஆண்மையை தொலைத்து விட்டு!

நின்று கொண்டே போகிறாள்
பெண்
ஆண்மையோடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உவர்நிலம்

விளைச்சலுக்கு உதவாததாய்
விலக்கப்பட்டு போன
உவர்நிலங்களில்
விளைந்திருந்தன
மூடைமூடையாய் "உப்பு"!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டம்

சிலிர்த்த மழையில்
வாடைக்காற்றில்
நலிந்து போகிற
மேகத்திரள்களை மினுக்கி
மின்னித்தீர்த்த இடிகளுக்கு நடுவில்
யாப்புகளுக்கு உட்படாத
சட்டங்களுக்கு உட்பட்டு
அசைவுற்று நிற்கிறது கழுதைகள்
தமிழர் போல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலுவைகள்

துன்பங்களே வாழ்வில்
சிறந்த வழியாய்
சிலுவைகளே எங்களை
செதுக்கிக்கொண்டிருக்கிறது!

பாரமாய்த் தெரியும் சிலுவை தான்
சிலர்
பாவங்களையும் சுமக்கிறது!

சுமக்க மறுப்பவர்கள் தோள் மீது
சிலுவைகள்
ஏற மறுக்கிறது!

எங்களை நாங்களே செதுக்கி
எங்களை சிலுவையாக்கி
உதரத்தை அறைந்து
உதிரத்தால் தோய்ந்தோம்!

மானுடம் இறக்க இறக்க
சிலுவைகள்
இறக்காது ஜனிக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சிலுவையில்
எங்கள்
சிலுவைகளை அறைந்துவிட்டோம்!

அந்த சிலுவையில் தான்
எங்கள்
கறைகளை கசக்கி
காயவிட்டோம்!

அந்தக் குருதியின் நதியில் தான்
எங்கள்
குரோதப் புண்களை
ஊறவிட்டோம்!

ஊமைகளின் வாயாய்
செவிடர்களின் செவியாய்
நோயானோர்க்குப் பாயாய்
வாழ்வளிக்க தம்
வாழ்வை அளித்த வள்ளலே!

சித்தமென்றால் வாருமே
இன்னுமொரு முறை
சிலுவையில் சாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்மம்

இது
வன்மபூமி!

கற்பிற்கு காவலிருக்கும்
காட்டு நாய்கள் பார்த்திருக்க
வீட்டு நாய்கள் வேட்டையாடிய விதம்!

ஊரறிய உமிழ்ந்து கொட்ட
எச்சில் போதாது
தொண்டை வறண்ட சமூகம்!

நியாயம் என்றுரைக்க
நாற்பது வக்கீல்கள்
நாளை
நீதிபதிகளாய் நிலைமாற
ஞாயம் செத்துக்கிடக்கும்!

ஓட ஓட கடித்துக் குதறி,
ஒதுக்குப்புற பற்றைக்காட்டில்
ஊன் குடித்தவர்கள்!

மரபணுச் சோதனையில்
மனிதனில்லை என்பதில்
மரபுகளை தொலைத்தவர்கள்!
பாதாளச் சிறையிலும்
பஞ்சு மெத்தையிட்டு
புதினமாய் தீர்ப்பெழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவிலங்கு போட்டு
சந்தர்ப்பங்கள் தேடும்
அரசியல் கூழைக்கைகள்!

மலர்ந்து போகிற பூக்கள்
அன்றே
அலர்ந்து போய்
கற்பழிந்து குப்பையாய்
காடுகளில் வீசிய பின்
துப்பறிய போவார்கள்!

முதிர்வதற்குள்
உதிர்ந்துபோகும் மொட்டுக்களும்
இப்படலத்தின் நாயகிகள்!

கற்பழித்து காட்டிலே போட்டவனும்
காடழித்து வீட்டிலே போட்டவனும்
தப்பித்து போக
கற்பிழந்து போகிறது நீதி மன்றம்!

விடிய விடிய
இருண்டுகொண்டே போகும்
எங்கள் நிலங்களில்,
திரௌபதியை துயிலுரிந்து
வீசிய சேலைத் துணிகளை
மடிப்பதற்கு கூட
இன்னும்
மனிதர் பிறக்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுவடை

புல்லரிக்கும் உரோமங்களின்
உச்சியில் காய்த்திருக்கும்
சல்லடையில் மாத்துகளாய்
பனியின் விதைகள்!

ஒளியின் விம்பங்களில்
உருண்டு போகும்
நாசித்துவாரங்களின்
மூச்சுப் புகைமண்டலம்!

காற்றின் சயனத்தில்
பூத்தூவும் பன்னீர் நதியின
ஓட்டத்தில் மிடுக்கேறும்
புற்களின் பீலிகள்!

நாற்றுக்கள் நடக்க எத்தனிக்கும்
நறுமணத்தில் விடை கொடுக்கும்
விருப்பமின்றி எருதுகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவு களவு போகும்
புலவின் வெளிச்சத்தில்
புலம்பெயர்ந்து போகும் மாடுகள்
அகதிகளாய்!

அவனும் பின் தொடர்வான்
அறுவடையின் கனவுகளோடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்


1. அருட்பணி.மார்க்கஸ் அடிகளார் (ஆசியுரை)
2. செந்தமிழ்ச் சொல்லருவி.

   பேராசிரியர் ச.லலீசன் (அணிந்துரை)
3. திரு.பற்றிக் லெம்பேட் (நயப்புரை)
4. திருமதி.ஆரோக்கிய நாதன் (வாழ்த்துரை)
5. திருமதி.அசுந்தா திபூர்சியஸ் பீரிஸ் (வழிகாட்டல்)
6. திரு.றெஜினோல்ட் குலாஸ் (வழிகாட்டல்)
7. திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் (வாழ்த்துரை)
8. செல்வன். புறூனோ நெவில் டலிமா (படங்கள்)
9. ஸ்கை பிறின்டர்ஸ் (அச்சுக்கோப்பு)

மற்றும் நலன்விரும்பிகள் பேருபகாரிகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி



திரு சேசு பெலிஸ்ரன் சோசை வங்காலையில் தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த.உயர்தரம் வரை மன்/புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். இவர் நாட்டுக்கூத்து கலையின் மரபு ரீதியான கலைக் குடும்பத்தில் பிறந்தவர்.

இவர் கவிதைகள் எழுதுவதிலும் "கவி"கள் பாடுவதிலும் சிறந்த புலைமை பெற்றவர். பாடசாலைக் காலங்களில் கவிதை நூல் ஒன்று வெளியீடு செய்தது என்நினைவுக்கு வருகின்றது. "சுவடுகளைத் தேடி" என்ற யேசுவின் பாடுகள் பற்றிய சிலுவைப்பாதை நூல் ஒன்றும் வெளியீடு செய்துள்ளார். இவர் ஒரு இளங்கலைஞர் ஆவார்.

தற்போது இவரால் வெளியீடு செய்யும் "அலுமினிய மழை" என்ற கவிதை நூல் குருதி சிந்திய குருமணியின் 35 வது ஆண்டு நிறைவின் போது அர்ப்பணமாக வெளியீடு செய்யப்படுவதை பாராட்டுகிறேன். அமரர் அருட்பணி மேரி பஸ்ரியனின் நினைவுநாள் மலராக எனது மாணவன் இந்தக் கவிதை நூலை வெளியீடு செய்கின்ற வேளையில் தொடர்ந்தும் பல ஆக்கங்களை வெளியீடு செய்து கலை உலகில் பிரகாசிக்க மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துகிறேன்.

**பாசமுள்ள ஆசிரியை**
**திருமதி பெப்பி. விக்ரர் லெம்பேட்**
**ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்)**

ஸ்கை அச்சகம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org